செய்தி வெளியீடு எண்: 923 நாள்: 19.10.2010.

## <u>சாதிவாரிக் கணக்கெடுப்பு குறித்து</u><br><u>முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நீதியரசர் ஜனார்த்தனம் அவர்களுடன் கலந்தாலோசனை</u>

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று (19.10.2010) – 13.10.2010 அன்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் டாக்டர் ராமதாசு அவர்களும், பல்வேறு சமுதாயங்களின் தலைவர்களும் சாதிவாரி கணக்கெடுப்பு குறித்து கொடுத்த கோரிக்கை தொடர்பாக – தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தின் தலைவர் நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்களுடன் கலந்தாலோசனை நடத்தினார்.

இந்தக் கலந்தாலோசனையின்போது, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன், அரசுத் தலைமைச் செயலாளர் திருமதி எஸ்.மாலதி, ஐ.ஏ.எஸ்., நிதித்துறையின் முதன்மைச் செயலாளர் திரு.கே.சண்முகம், ஐ.ஏ.எஸ்., சட்டத்துறைச் செயலாளர் திரு.தீனதயாளன், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் செயலாளர் திரு.இராமநாதன், ஐ.ஏ.எஸ்., ஆகியோர் உடனிருந்தனர்.

****

வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9